# காந்திநூற்றாண்டு விழாவுக்கு இலங்கை குழந்தைகள்


Registerd as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தொலைபேசி இல. 49 — தந்தி 337 — National Tamil Daily — மலர் 16 — இதழ் 177 — தேசிய தினசரி

யாழ்ப்பாணம் இலை — ஆடி 22 ஜூலை 11 — செவ்வாய்க்கிழமை (6-8-69)


## விமானத்தில் பாரதத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர்

புதுடில்லி, ஆக. 4

காந்தி நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக நூறு குழந்தைகள் இலங்கையிலிருந்து அழைக்கப்படுவர். மலேஷியா, பர்மா ஆகிய நாட்டைச் சேர்ந்த குழந்தைகளும் பாரதத்தில் நடைபெறவிருக்கும் காந்தி நூற்றாண்டுவிழாவில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்படவுள்ளனர்.

இலங்கைக் குழந்தைகள் விமானத்தில் பாரதத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர். பாரதநாட்டுக் குழந்தைகளுக்கும், இலங்கை மலேஷியா, பர்மா ஆகிய நாட்டுக் குழந்தைகளுக்குமிடையில் நட்புறவை வளர்ப்பதே இதன் நோக்கமென்று காந்தி நூற்றாண்டு விழாச் சபையினர் அறிவித்தனர்.

### காந்திஜயந்தி தினத்தையடுத்து ஒக்டோபர் 5-ல்

# ஆட்சிமன்றகட்டிடத்தின்முன் சத்தியாக்கிரகம் செய்வராம்

## புதிய பங்கீட்டரிசி புத்தகம் எடுக்கவேண்டிய கடைசி திகதி: 19

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணப் பகுதியில் புதிய பங்கீட்டரிசிப் புத்தகங்களை பலர் இன்னும் பெறவில்லையென்றும், அவர்கள் தமது பங்கீட்டரிசிப் புத்தகங்களை உடனடியாக தமது பகுதி கிராம சேவகர்களிடம் பெற்றுக் கொள்ளும்படி யாழ்ப்பாணம் தலைமைக் காரியாதிகாரிக் கேட்டுக்கொள்கிறார்.

24-வது தொடர் பங்கீட்டரிசிப் புத்தகங்களை பெற வேண்டிய கடைசித் திகதி இம்மாதம் 19-ந் திகதி என அறிவிக்கப்படுகிறது. இத்திகதிக்குப் பிறகு பங்கீட்டரிசிப் புத்தகங்களை எடுப்போருக்கு பெருத்த சிரமம் ஏற்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. [ந. நி.]

## தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தினர் அறிவிப்பு

நல்லூர், செவ்வாய்

'இன்னும் இருமாதங்களில் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தை தீவிரமாக அமுல்நடத்தி ஆலயங்கள் தேநீர்க்கடைகள் மற்றும் பொதுஇடங்கள் ஆகியவற்றை ஹரிஜனர்களுக்கு திறந்துவிடாவிட்டால்நேரடி நடவடிக்கையின் முதல்கட்டமாக ஆட்சிமன்ற வாசலில் அக்டோபர் 5-ம் திகதி முதல் சத்தியாக்கிரகத்தை மேற்கொள்வது'

இத் தீர்மானம் நேற்று யாழ் நகரமண்டபத்தில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

திரு. எஸ். டி. நாகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஆலயப்பிரவேச இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவதென்றும் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச்சட்டம் பத்து வருடங்களுக்கு மேலாக இயற்றப்பட்டிருந்தும் இதுசம்பந்தமாக இரு வருடங்களுக்கு மேலாக இந்துமதத் தலைவர்களும் தமிழ் அரசியல்கட்சித் தலைவர்களும் தொடர்ந்து வேண்டுகோள்விடுத்திருந்தும் நீதிமன்றம் இதுசம்பந்தமாக வழக்குகளில் தீர்ப்பளித்திருந்தும் பிரதமரும் பொலிசாரும் இச் சட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தும் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தில் சமீபத்தில் சத்தியாக்கிரகம்செய்த சத்தியாக்கிரகிகள் வெளியேற்றப்பட வன்முறை பிரயோகிக்கப்பட்டதெனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இதன்காரணமாகவே ஹரிஜனர்கள் விடாமுயற்சியுடனும் உறுதியுடனும் தொடர்ந்து இந்த இயக்கத்தை நடத்துமாறு கேட்டுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. சமீபத்தில் நடைபெறவிருக்கும் செல்வச்சந்நிதி ஆலயம் வல்லிபுரம் ஆலயம் ஆகிய ஆலயங்களின் உற்சவங்களின்போது சத்தியாக்கிரக இயக்கத்தை இந்த ஆலயங்களில் நடத்த ... முடிவு செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

## ரஷ்யாவுக்கு தேயிலை, ரப்பர் ஏற்றுமதியாகும்

கொழும்பு, திங்கள்

சோவியத் யூனியனுடன் ஏற்பட்ட வர்த்தக தொடர்புகளுக்கான உடன்படிக்கையொன்று நேற்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இவ்வொப்பந்தத்தின் கீழ் இலங்கை தேயிலை, றப்பர், தேங்காய்ப் பொருட்களை ரஷ்யாவுக்கு விற்கும். ரஷ்யாவிலிருந்து இரும்புக்கனிப் பொருட்களையும், யந்திர சாதனங்களையும் இலங்கை வாங்கும்.

## 'நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு உதவும்'

### கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலைய திறப்பு விழாவில் பிரதமர்

பம்பலப்பிட்டி, திங்.

'கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உதவும். வெளிநாட்டு செலவாணியை அது தேடித்தருவதுடன் பிறநாடுகளுடனான தொடர்பை மேலும் வலுப்படுத்தும்'

இவ்வாறு புனர் நிர்மாணம் செய்யப்பட்ட கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்க தெரிவித்தார்.

திரு. டட்லி மேலும்பேசுகையில், கட்டுநாயக்கா விமான நிலைய புனர் நிர்மாணத்திற்கு பெரும் உதவி செய்த கனடா தேசத்துக்கு நன்றி தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த கனடிய பிரதமரின் விசேஷ பிரதிநிதியான செனட்டர் ஜோன் பி. ஏர்ட் பேசுகையில் இலங்கை சமீப காலத்தில் பலதுறைகளில் அடைந்து வரும் முன்னேற்றம் குறித்து தமது பாராட்டைத் தெரிவித்தார். தமது

(6ம் பக்கம் பார்க்க)

[தமிழ் மொழி 'அ' பாடத்திட்டத்திற்கான மாதிரி வினா-விடைகள் இன்று இடம் பெறமாட்டா. வெளிவரவில்லை வெளிவரும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## பத்திரிகை காகிதம் விலை குறையும்

### புதிய தீர்வை விகிதவிபரம்

கொழும்பு, திங்கள்

பத்திரிகைக்காகிதம் அச்சயந்திர உபகரணங்கள், புகைப்படப்பிடிப்பு கமரா. சத்திரசிகிச்சைக் கருவிகள் முதலிய சில பொருள்களின் இறக்குமதித்தீர்வை குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் இப்பொருள்களின் விலைகள் குறையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

பத்திரிகைக் காகிதத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வை 45 சத விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் பியானோ, பிரம்பு, கிராமபோன், ரேடியோகிராம், புகைப்படப் பிடிப்பு பிலிம் கிராமபோன் ரெக்கார்ட், கோழிக்குஞ்சு பொரிக்கும் சாதனம் ஆகியவைகளின் தீர்வை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் கோழிமுட்டை, கோழிக்குஞ்சு, கோழி இறைச்சி ஆகியவைகளின் விலை அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.

50 சத விகித தீர்வை விதிக்கப்பட்டிருந்த பத்திரிகைக் காகிதம் 5 சத விகித தீர்வையாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 40 சத விகிதமாக இருந்த அச்சு இயந்திரங்களின் இறக்குமதித் தீர்வை முற்றாக ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. 150 சத விகித தீர்வை விதிக்கப்பட்டிருந்த புகைப்படக் கமராவின் தீர்வை 100 சத விகிதமாகவும் சத்திர சிகிச்சைக் கருவிகளின் தீர்வை 30 சத விகிதமாகவும், குளிர்சாதனப் பெட்டியின் தீர்வை 100 சத விகிதமாகவும் விளையாட்டுப் பலகைகளின் தீர்வை 330 சத விகிதத்திலிருந்து 300 சதவிகிதமாகவும் கடதாசிக் கட்டத்தின் தீர்வை 330 சத விகிதத்திலிருந்து 300 சத விகிதமாகவும் ரேப்ரெக்காட்டரின் இறக்குமதித்தீர்வை 150 சத விகிதத்திலிருந்து 105 சத விகிதமாகவும் குறைக்கப்பட்டிருக்கிறது.

பியானோவின் இறக்குமதித் தீர்வை 38 சத விகிதத்திலிருந்து 105 சத விகிதமாகவும், கோழிக்குஞ்சு பொரிக்கும் 'இன்கியூபேட்டர்'களின் இறக்குமதிக்கு இதுவரை தீர்வை இருக்க

[6ம் பக்கம் பார்க்க]

### மாவிட்டபுரம்

கந்தசுவாமி கோவில் ஆலயப்பிரவேச வழக்கு

விபரம் 6-ம் பக்கம் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

அன்பும் அருளுமே ஒருவனுக்குப் பூரணத்துவத்தை ஏற்படுத்த வல்லவை.

— சுவாமி விவேகானந்தர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

கீலகவருஷம் ஆவணி மாதம் 22-ந்திகதி
(6-8-68)


## வகுப்புவாத குடியேற்றமா?

பத்து லட்சம் சிங்கள மக்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேற்ற வேண்டுமென்றும் அப்பொழுதுதான் உண்மையான தேசிய ஐக்கியம் இந்நாட்டில் உருவாக முடியுமென்றும் முன்னாள் பிரதம நீதியரசரான திரு. ஹேமபாலசந்த வகா பொத்துஹெர என்ற இடத்தில் சிங்களப் பாமரமக்கள் நிறைந்த கூட்டத்தில் கூறியிருக்கிறார். பத்து லட்சமல்ல இருபது லட்சம் சிங்கள மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறுவதை இப்பகுதி மக்கள் வரவேற்பர். ஆனால் திரு. ஹேமபாலநாயகா கூறுவதுபோன்ற 'குடியேற்றம்' இப்பகுதி மக்களுக்கு அச்சத்தையும் ஐயத்தையும் ஏற்படுத்துவது மட்டுமல்ல தேசிய ஐக்கியத்தை வளர்ப்பதற்குப்பதில் சீர்குலைக்கவே உதவும்.

சிங்கள மக்களை வடக்கிலும் கிழக்கிலும் குடியேற்ற வேண்டுமென்றும் இதுவே தமது அடுத்த போராட்டம் [மாவட்ட சபை போராட்டம் முடிந்துவிட்டது] என்றும் திரு. ஹேமபாலநாயகா சில தினங்களுக்கு முன் ஒரு கூட்டத்தில் தெரிவித்து தமது 'போராட்டத்தை' ஆரம்பித்தபோது, குடியேற்றத் திட்டத்தின் நோக்கம் பற்றியும் அது தவறான நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட தீமைகள் பற்றியும் குடியேற்றத் திட்டங்கள் இன அடிப்படையிலோ, வகுப்புவாதக் கண்ணோட்டத்திலோ அமைக்கப்படக் கூடாது என்றும் இதே பத்தியில் நாம் குறிப்பிட்டிருந்தோம். பல தரப்பட்ட கருத்துக்களையும் பல தரப்பட்ட சாட்சியங்களையும் கவனமாகக் கேட்டு நிதானமாகச் சிந்தித்து நியாயம் வழங்கவேண்டிய பெரும் பொறுப்புமிக்க பதவியை வகித்த திரு. ஹேமபாலநாயகா, இப்பொழுதும் நிதானமாகச் சிந்தித்து உண்மை நிலையை உணர்ந்து, தெளிந்து தமது நிதானத்தை மக்களுக்கு 'உத்தமக்கூற' வேண்டுமென்பதற்காக மீண்டும் 'குடியேற்றம்' பற்றி இன்று எழுத வேண்டி நேர்ந்துள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் சிங்கள மக்கள் குடியேறி வாழமுடியாத நிலையிருப்பதாகவும் இங்கு சிங்கள மக்கள் வாழ்வதற்கு தமிழ் மக்கள் இடமளிக்காததுபோலவும் திரு. ஹேமபாலநாயகா போன்றவர்கள் சிங்கள பாமரமக்கள் மத்தியில் பிரசாரம் செய்துவருகின்றனர். இந்த விஷமப் பிரசாரத்தின் விளைவு எப்படியிருக்குமென்பதை அவர்கள் உணராவிட்டாலும் அரசாங்கமாவது உணர்ந்து தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது நல்லது. சிங்கள மக்கள் பலர் வடக்கிலும் கிழக்கிலும் இன்று நேற்றல்ல பலவருடங்களாக குடியேறி வாழ்ந்து வருகின்றனர். தொழில், வர்த்தகத்தில் அவர்கள் ஈடுபட்டு இப்பகுதி மக்களுடன் சகோதரர்களாக வாழ்ந்துவருகின்றனர். இதுதவிர அரசாங்கம் குடியேற்றத் திட்டங்கள் மூலம் கந்தளாய், கல்மூனை, அம்பாறை, பதவியா முதலிய இடங்களிலும் சிங்கள மக்களைக் குடியேற்றியிருக்கிறது. திருக்கோணமலை, மட்டக்களப்பு கரையோரப் பகுதியில் மீனவர்கள் பலர் குடியேறி வாழ்கின்றனர். வடக்கிலும் கிழக்கிலும் ஓர் அங்குல நிலம் கூட இல்லாத மக்கள் பலர் வாழ்கையில், இப்பகுதி மக்களுக்கு நிலம் கொடுக்காமல் வெளியூரிலிருந்து மக்களைக் கொண்டு வந்து அரசியல், வகுப்புவாத நோக்கங்களுடன் திட்டமிட்டுக் குடியேற்றுவதையே இப்பகுதிமக்கள் எதிர்க்கின்றனர்.

பல்லாண்டு காலமாக பன்னேகல தோட்டத்தில் வாழ்ந்துவந்த இந்தியவம்சாவழியினரான சுமார் இரண்டாயிரத்து ஐநூறு தமிழ்த் தோட்டத்தொழிலாளர், அந்தத் தோட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதால் வேலையிழந்து நிற்கும் நிலையில் உள்ளனர். இவர்களை கண்டிப் பகுதியில் வேறு இடங்களில் குடியமர்த்தவும், அரசாங்க தோட்டக் கூட்டுத்தாபனத்தில் வேலைவழங்கவும் முயற்சி செய்யப்பட்டபோது, அதை கண்டிப்பகுதி மக்கள் எதிர்த்ததாகவும், இதைத்தொடர்ந்து, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படவேண்டியவர்களில் இந்த இரண்டாயிரத்து ஐநூறுபேருக்கும் முதலிடமளிக்க முடிவுசெய்திருப்பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையானால் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில், அப்பகுதிமக்களில் நிலமில்லாதோருக்கு நிலம் வழங்காமல் வெளியாரைக் கொண்டுவந்து குடியமர்த்துவதை அப்பகுதி மக்கள் எதிர்த்தால் அதில் என்ன ஆச்சரியம்.

வகுப்புவாத, இன அடிப்படையில் ஒரு பகுதியில், மற்றொரு பகுதியினரைக் குடியேற்றுவதால் தேசிய ஐக்கியம் வளரமுடியாது. சிங்களக் குடியேற்றத்திட்டம், தமிழ்க்குடியேற்றத்திட்டம், முஸ்லிம் குடியேற்றத்திட்டம் என்பதைவிடுத்து குடியேற்றத்திட்டங்களில் நிலமில்லாதவருக்கு அவர்கள் தமிழராக இருப்பினும் சிங்களவராக இருப்பினும் இஸ்லாமியராக இருப்பினும் வேறுபாடின்றி குடியமர்த்துவதே தேசிய ஐக்கியத்தை வளர்ப்பதற்குச் சிறந்தவழி.

# கூட்டுறவு இயக்கத்தை ஆராய ஆராய்ச்சி சபை

## விரைவில் யாழ்ப்பாணம் வருமென ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், செவ்.

'57 வருடங்களுக்குப்பின்பு கூட்டுறவு இயக்கத்தைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு ஆராய்ச்சிச் சபை நியமிக்கப்பட்டுள்ளது. அச்சபை மிக விரைவில் யாழ்ப்பாணம்வர இருக்கிறது. அதற்குணங்களில் உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாம்'

இவ்வாறு வட ஐக்கிய மேற்பார்வைச்சபையின் ஆதரவில் சர்வதேச கூட்டுறவுத் தினத்தையொட்டி யாழ். மேற்கு கூட்டுறவுச் சங்க உதவி ஆணையாளர் பகுதியில் சிறந்த கூட்டுறவு விவசாயிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குப் பரிசளிப்புவிழாவாம். நகரமண்டபத்தில் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபைத் தலைவர் திரு. ஆர். இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது திரு. பத்திராஜா மேற்கண்டவாறு கூறினார்.

திருபத்திராஜா தொடர்ந்து பேசுகையில்: கூறியதாவது கூட்டுறவு இயக்கம்பெருமை வாய்ந்த இயக்கம். கூட்டுறவு இயக்கத்தில் ஆரம்பத்தில் சிறுதொகை மக்களே அங்கத்தவர்களாக இருந்தார்கள். ஆனால் இப்போது இருபது லட்சத்திற்கு மேலானவர்கள் அங்கத்தவர்களாக இருப்பது கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும். ஆசியாக் கண்டத்திலுள்ள நாடுகளில் இலங்கை கூட்டுறவு இயக்கத்தில் முன்னேறியுள்ளது.'

'இலங்கையில் கூட்டுறவுச் சங்கமூலம் நூற்றுக்கு எழுபத்தைந்துவீத மக்கள் உணவுப்பொருட்களைப் பெறுகின்றனர். இதனால் தொழில் வீதம் 220 லட்சமாக அதிகரித்துள்ளது.

உதவி அரசாங்க அதிபர் திரு. கி. முருகேசம்பிள்ளை பேசுகையில், 'கூட்டுறவுக்கு ஊற்றுநிலையாக இருப்பது யாழ்ப்பாணம். மனிதனின் உடலில் இரத்தம் சேர்ந்திருப்பதுபோல, யாழ்ப்பாண மக்களின் உள்ளத்தில் கூட்டுறவு இயக்கம் சேர்ந்திருக்கின்றது. உணவு உற்பத்தி என்ற இயக்கத்திலே வடபிரதேசம் முன்னணியில்நிற்கின்றது, இரண்டாம் மகாயுத்தகாலத்தில் நாட்டைக் காப்பாற்றியது கூட்டுறவு இயக்கமே' என்று கூறினார்.

அளவெட்டி ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் ''பெருநாராக் கட்டுக்கோப்பைத் தந்தது கூட்டுறவு இயக்கம்'' என்றார்.

முதலாம் பரிசுக்கு 100 ரூபாவும், இரண்டாம் பரிசுக்கு 60 ரூபாவும், மூன்றாம் பரிசுக்கு 40 ரூபாவும், யாழ்- மேற்குப் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்க சமாசங்களினால் உதவப்பட்டு வழங்கப்பட்டன. விழா முடிவில் கதம்பநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ந. நி.)

## பாராட்டுவிழா

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய திரு. எஸ். சனாரத்தினம் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெறுவதை முன்னிட்டு பண்டிதர் அ. பொன்னுத்துரை தலைமையில் பாராட்டு வைபவமொன்று நடைபெற்றது. இவ் விழாவில் வழக்கறிஞர் ப. கதிரவேலு, இளைப்பாறிய ஆசிரியர் நா. சரவணமுத்து, ஆசிரியர்கள், ச. சிவராசலிங்கம் ஆகியோரும் பேசினர்.

## இன்றைய பலன்

(6-8-68)

ஆடி மீ 22 உ

செவ்வாய்க்கிழமை

திதி- திரயோதசி இரவு 9-27 மேல் சதுர்த்தசி.

நட்சத்திரம்- பூராடம். இரவு 9-42 மேல் உத்தராடம்.

ராகுகாலம் - 3-04-4-34.

சுபநேரம் - 10-34—12-04.

இன்று பிறந்தவர்களுக்கு- தத்துவம் பேசிக்கொண்டே சந்தர்ப்பத்தைக் கோட்டை விடலாம். எனவே வாழ்க்கையைக் கண்ணோட்டத்துடன் பார்க்கவும். சிலருக்குத் தாய்வழியால் தனவரவுக்கு இடமுண்டு. வியாபாரிகள் கவனம் செலுத்தின் விருத்தியடைவர். இடப்பிரிவு ஏற்படின் அதைத் தற்பிரிவென்றே கூறவேண்டும். பெண்களாயின் பொறுப்புணர்ச்சியுடன் செயலாற்றவும். பொதுவாகச் சமயோசித கலையைக் கொடுக்கும் ஆண்டு.

மேஷம்- தன்வழி நாடல் நகைச்சுவையுண்டு.

ரிஷபம்- அன்னிய வாசம், அகால போசனம்.

மிதுனம்- இரு மனம் கலக்கும், இனிமையும் பிறக்கும்.

கடகம்- பொருள் விரயம், பொல்லாங்கு கேட்டல்.

சிம்மம்- பந்துக்கள் உறவு, பகைமை நீக்கம்.

கன்னி- கல்விச் சிறப்பு கடமையுணர்ச்சி.

துலாம்- பொருள்வரவு புதினம் கேட்டல்.

விருச்சிகம்- காரியத் தடை, கவலையின் தாக்குதல்.

தனுசு- குடும்பக் கவலை குறைகுவழித் தவிர்ப்பு.

மகரம்- தனச் சிறப்பு, தானிய விருத்தி.

கும்பம்- அன்னியர் பகை, ஆபத்துமுண்டு.

மீனம்- தாய்வழிப் பெருமை, தாராள வாழ்வு.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## 'சிங்களவருடன் உறவு வைக்க விரும்பியவர்'

நாவலப்பிட்டி, திங்கள்

''இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் சிங்கள மொழியைப் பேசத் தெரியாத சில சிங்களத் தலைவர்களும், சில பெரியார்களும் ஆங்கிலமொழியை அரசகரும மொழியாக்குவோம் என்று கூறினர். ஆனால் அதற்கு சில வருடங்களுக்கு முன் வாழ்ந்த விபுலானந்த அடிகள் தமிழ், ஆங்கிலத்துடன் சிங்களத்திலும் தேர்ச்சிபெற்று விளங்கினார்''

இவ்வாறு மாத்தளை புனித தோமையார் கல்லூரி மண்டபத்தில் விபுலானந்தர் நினைவுதின விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. இரா சிவலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் பேசுகையில், அடிகளார் வாழ்ந்த காலத்தில் சிங்களவரே முறையாகச் சிங்களம் கற்காமல் இருந்த வேளையில், விபுலானந்தர் அம்மொழியில் அதிக அக்கறை செலுத்தியதற்குக் காரணம் சிங்கள மக்களுடன் நல்லுறவோடு வாழ அவர் விரும்பியதே என்றார்.

## நாடும் நடப்பும்

ஆடி வேல்விழாவிலே நாதஸ்வர கானம் மழையாகப் பொழியப்போகிறது. நல்லூரில் ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலில் தாகத்துக்குத் தண்ணீர் மட்டும் கொடுக்கப்படவில்லை. அறிவுத் தாகத்துக்கும் தாகசாந்தி கிடைக்கிறது. ஆமாம். அந்தத் தண்ணீர்ப் பந்தலில் ஒவ்வொரு நாள் மாலையிலும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் சம்பூர்ண ராமாயண விரிவுரை நிகழ்த்துகிறார்கள். விரிவுரையல்ல! அருளுரையும் அறிவுரையுமாக இருக்கிறது.

ஃ ஃ ஃ

செக்கோஸ்லவாக்கியாவின் எதிர்காலம் எப்படியிருக்குமென்று உலக அரசியலரங்கில் பல விதமான சந்தேகங்கள் கிளம்பின. எப்படியோ பிரச்னை ஒருவாறு தீர்ந்திருக்கிறது.

செக்கோஸ்லவாக்கியாவும், சோவியத் யூனியனும் இரகசிய உடன்படிக்கை செய்திருப்பதாகவும் சோவியத் தலைவர்களின் மிரட்டலுக்குச் செக். தலைவர்கள் பணிந்துள்ளதாகவும் செக் மாணவர்களும்மற்றும் பலரும் சந்தேகக்கண்கொண்டு பார்க்கின்றனர். இதைசெக். தலைவர்கள் மறுக்கின்றனர். செக்கோஸ்லவாக்கியத் தலைவர்கள், தங்கள் அரசியல் சீர்திருத்த நோக்கிலிருந்து விலகிவிடவில்லை! சோவியத் தலைவர்களுக்கு விட்டுக்கொடுக்கவும் இல்லையாம். ஆனால் சோவியத் தலைவர்களும் தங்களுக்குத் தோல்வியேற்பட்டு விட்டதாகக் கருதவில்லை.

சோவியத் - செக்கோஸ்லவாக்கிய 'நெருக்கடி'யைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாமென யாரும் நினைத்திருந்தால் அவர்களுக்குத்தான் இது தோல்வி என்று சோவியத் அரசியல் பற்றி அறிந்த யாழ்ப்பாணத்துத் தோழர் ஒருவர் சொல்கிறார். அவர் கூற்றில் நியாயமில்லை என்று சொல்லமுடியுமா?

ஃ ஃ ஃ

காஷ்மீர் 'சிங்கம்' என்று பண்டிதநேருவினால் புகழப்பட்ட ஷேக் அப்துல்லா இந்தியாவில் மட்டுமல்ல இப்போது இலங்கையிலும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார். இலங்கைக்கு வராமலே சர்ச்சை கிளப்பியிருக்கிறதென்றால் அவர் வந்தால் எப்படியிருக்குமோ? ஷேக் அப்துல்லா நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டிருப்பதாக இந்திய அரசாங்கம் தெரிவித்தது பற்றி அப்துல்லாவை இங்கு அழைக்க முயற்சி செய்யும் ஜனாப் பதியுதீன் மாமூத் சந்தேகம் கொள்கிறார். நிபந்தனையின்றி விடுதலையடைந்திருந்தால் அவர் இங்கு வருவதற்கு ஏன் இந்தக்கஷ்டம் என்றும் கேட்கிறார். சென்ற பொதுத்தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்குகள்தான் திரு. டட்லி சேனநாயக்காவை ஆட்சியில் அமர்த்தியதென்றும் ஷேக் அப்துல்லாவை இங்கு அழைப்பதற்கு பிரதமர் தடையாக இருந்தால் அடுத்த தேர்தலில் தோல்வியே கிடைக்குமென்றும் ஜனாப் பதியுதீன் மாமூத் எச்சரித்திருக்கிறார். ஷேக் அப்துல்லாவை அழைப்பதன்மூலம் அடுத்த பொதுத் தேர்தலில் சுலபமாக வெற்றிபெற முடியுமானால் பிரதமர் அவரை அழைக்க ஏன் தயங்கவேண்டும். அப்துல்லா வந்தால் ஜனாப் மாமூத் அடுத்த தேர்தலில் தமது 'வோட்டை' யாருக்குப் போடுவார்?

— ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்தான் பகுதிகளில் $5\frac{1}{2}$ மணிநேர இஸ்ரேல் விமானக் குண்டு வீச்சு

## பந்தோபஸ்து சபையின் அவசர கூட்டத்துக்கு ஜோர்தான் கோரிக்கை

அம்மான், ஆக. 5

தனது பகுதிகளில் நேற்று இஸ்ரேலிய விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதை விவாதிக்கும் பொருட்டு, அவசர கூட்டமொன்றை நடத்துமாறு ஜோர்தான், ஐ. நா, பந்தோபஸ்து சபையைக் கேட்டுள்ளது. ஐ. நா. வில் ஜோர்தான் பிரதிநிதியாக இருப்பவருக்கு ஜோர்தான் அரசாங்கம் எழுதியுள்ள கடிதமொன்றில் இவ்வாறு பணித்துள்ளது.

ஐ. நா. பந்தோபஸ்து சபைத் தலைவருக்குச் செய்துள்ள புகாரில், அம்மானுக்கு மேற்கே சுமார், 30 மைல்தூரத்திலுள்ள பகுதிகளில், இஸ்ரேல் நேற்று ஐந்தரைமணி நேரத்துக்குக் குண்டுவீச்சு நடத்தியதாக ஜோர்தான் தெரிவித்துள்ளது.

இந்த விமானத் தாக்குதலின் விளைவாக 30 அரபியர் கொல்லப்பட்டதாகவும், மற்றும் பலர் காயப்படுத்தப்பட்டதாகவும் ஜோர்தான் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் விமானமொன்றைச் சுட்டு வீழ்த்தியதாகவும், 2 டாங்கிகளை நாசப்படுத்தியதாகவும் ஜோர்தான் கூறியுள்ளது. இதை இஸ்ரேல் மறுத்துள்ளது.

### இஸ்ரேல் கடிதம்

ஐ. நா. பந்தோபஸ்து சபைத்தலைவருக்கு, இஸ்ரேல் பிரதிநிதி எழுதியுள்ள ஒரு கடிதத்தில், அரபுத் தீவிரவாதிகளின் பயிற்சி நிலையங்கள்மீதே இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார். அரபுத் தீவிரவாதிகள், கொரில்லாக்களின் தாக்குதல்கள் எந்தப்பகுதிகளிலிருந்து இஸ்ரேல்மீது நடாத்தப்படுகிறதோ, அந்தப்பகுதிகளிலேயே இஸ்ரேல் குண்டுவீச்சு நடத்தியதாக அவர் மேலும் தமது கடிதத்தில் விளக்கியுள்ளார். கொரில்லாத் தாக்குதல்களுக்கு ஜோர்தானே பொறுப்பேற்கவேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குண்டுவீச்சு நடத்தப்பட்ட பகுதிகளை ஜோர்தான் மன்னர் ஹுசெயின் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

### விடுதலை முன்னணி

அரபுத் தீவிரவாதிகளின் இயக்கமான பலஸ்தீன் விடுதலை முன்னணி, இஸ்ரேல் பதுங்குப்புகளில் 11பேரைத் தாம் கொன்றதாகவும், ரயில்வேப் பாதையொன்றை வெடிவைத்துத் தகர்த்ததாகவும், சில டாங்கிகளை நாசமாக்கியதாகவும் உரிமை பாராட்டியுள்ளது.

## ரதோற்சவம்

அனலைதீவு, திங்கள்

அனலைதீவு ஐயனார் கோவில் தேர்த்திருவிழா இம்மாதம் 8-ம் திகதி நடைபெறவிருக்கிறது. வழமைபோல் அன்று மாலை தீர்த்தோற்சவமும் அடுத்தநாள் பூங்காவனமும் நடைபெறும்.

## காந்தி நூற்றாண்டு விழாவுக்கு 2 ரயில்

பங்களூர், ஆக. 5

மகாத்மா காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவரது போதனைகள், வாழ்க்கைச் சரிதை ஆகிய வற்றை விளக்கும் படங்கள், பொருட்காட்சியுடனடங்கிய இரு ரயில்கள் நாடு முழுவதையும் சுற்றிவர அடுத்த வருடம் விடப்படுமென இந்திய மத்திய ரயில்வே மந்திரி திரு. பூனாச்சா மைசூரில் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரியில்

## திருட்டுக்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

சாவகச்சேரிப் பகுதியில் இப்போது திருட்டுக்கள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் இது குறித்து அச்சம் கொண்டுள்ளனர்.

சமீபத்தில் பிரதான வீதியிலுள்ள ரேடியோ திருத்தும் கடையொன்று உடைக்கப்பட்டு சில பொருள்கள் திருடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




# 'பிரட்டிஸ்லாவா மாநாட்டில் இரகசிய உடன்படிக்கை எதுவும் செய்யவில்லை'

## செக். தலைவர் டுப்ஜெக் உறுதியுரை

பிராக், ஆக. 5

பிரட்டிஸ்லாவாப் பேச்சுவார்த்தைகளையிட்டு நேற்று நாட்டுக்கு ஒலிபரப்பிய வானொலி உரையில், மற்ற 5 கம்யூனிஸ்ட் நாடுகளுடனும் தாம் எவ்வித இரகசிய உடன்படிக்கையும் செய்துகொள்ளவில்லை என்று செக்கோஸ்லவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. டுப்ஜெக் கூறியுள்ளார். செக். நாட்டின் சீர்திருத்தக் கொள்கை, தொடர்ந்து செயலாற்றப்படும் என்று அவர் உறுதியளித்தார்.

செக்கோஸ்லவாக்கியாவின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு, கம்யூனிஸ நாட்டுக் கூட்டில் அது உறுதியான அங்கத்துவ நாடாக இருப்பது பெரிதும் உதவுமென்றும் திரு. டுப்ஜெக் குறிப்பிட்டார்.

ரஷ்ய மற்றும் நான்கு கிழக்கு ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள், செக்கோஸ்லவாக்கியா எதிர்பார்த்ததை எல்லாம் நிறைவேற்றியுள்ளதாகத் திரு. டுப்ஜெக் மேலும் கூறினார்.

### 'சந்தேகம் வேண்டாம்'

பிரட்டிஸ்லாவா பேச்சுக்கள் பற்றி எந்த விதமான சந்தேகங்களையோ, பயங்களையோ வைத்துக்கொள்ள வேண்டாமென்று அவர் நாட்டு மக்களை வேண்டிக்கொண்டார். இப்பேச்சுவார்த்தைகள், ரஷ்யாவுடனான செக்கோஸ்லவாக்கியத் தொடர்புகளைப் பலவீனப்படுத்தவில்லை என்றும் மாறாக, மேலும் வலுப்படுத்தியுள்ளதாகத் திரு. டுப்ஜெக் தெரிவித்தார்.

## கொங்கோ ஜனாதிபதி

### மீண்டும் பதவியில்

பிரஸல்ஸ், ஆக. 5

கொங்கோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற திடீர் இராணுவப் புரட்சியொன்றின் மூலம் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஜனாதிபதி மொஸாம்போ பியாத், அதே புரட்சி இராணுவத்தினரால் மீண்டும் ஜனாதிபதி பதவியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி பியாத், மக்களிடையே அதிகசெல்வாக்கு உடையவர் எனக்கூறப்படுகிறது. இவ்வளவுக்கும், அவர் அதிகாரத் தம்மைப் பகிரங்கமாகக் காட்டிக்கொள்வதோ அல்லது பேசுவதோ கிடையாது.

# தன்னைப்பாதுகாக்கும் பொறுப்பை இஸ்ரேல் தட்டிக்கழிக்காது

— எஷ்கோல்

டெல்அவிவ், ஆக. 5

இஸ்ரேல்மீது அரபுகொரில்லாப் படைகள் நடத்தும் தாக்குதல்களை உலகம் தடுக்க முன்வரத் தவறினாலும், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் தனது பொறுப்பை இஸ்ரேல் தட்டிக்கழித்துவிடப் போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் திரு. எஷ்கோல் இங்கு பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இஸ்ரேலிய விமானமொன்று அரபுத் தீவிரவாதிகள் சிலரால் அல்ஜீரியாவுக்குக் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம்பற்றித் திரு. எஷ்கோல் குறிப்பிடுகையில், இத்தகைய சம்பவங்களின் சங்கிலிக் கோர்வையே கடந்த வருடப் போருக்குப் பாதை சமைத்தது என்று எச்சரித்தார். அப்போதும், இஸ்ரேல் இவ்விதம் அச்சுறுத்தப்பட்டபோது, உலகநாடுகள் அனுதாபம் தெரிவித்தனவே தவிர, நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று கூறிய இஸ்ரேல் பிரதமர், அரபுத் தீவிரவாதிகளின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தத் தமது நாடுதேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமெனத் தெரிவித்தார்.

அரபுக் கொரில்லாக்களின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும்இஸ்ரேலிடமிருந்து பதில் நடவடிக்கை கிடைக்கும் என்று திரு, எஷ்கோல் வலியுறுத்தினார்.

# அரபிய விமான பலம் அதிகரித்து விட்டது

— ஜெனரல் டயான்

இஸ்ரேல் இராணுவத்தலைவர் ஜெனரல் டயான், அரபுநாடுகளின் விமானப் பலம் கடந்த ஒரு வருடத்தில் மிகவும் வளர்ச்சியடைந்துவிட்டதாகக் கூறியுள்ளார்.

சோவியத்ரஷ்யாவின் உதவியினால், இப்போது அரபு நாடுகள், ஆறு விமானங்களுக்கு ஒன்று என்ற விகிதத்தில், இஸ்ரேலைவிட அதிகமாக வைத்துள்ளன என்று ஜெனரல் டயான் அறிவித்தார்.

இஸ்ரேலுக்கு அதிக விமானங்கள் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இஸ்ரேலுக்குச் சில விமானங்களை அமெரிக்கா விற்பதற்கு இருக்கிறது. இந்த விற்பனை, அமெரிக்க காங்கிரஸ் அங்கீகாரத்தைக் காத்திருக்கிறது.

# பிராக் தெருக்களில் மாணவர் ஆர்ப்பாட்டம்

## பிரட்டிஸ்லாவா முடிவுகள் பற்றிச் சந்தேகம்

செக். தலைநகரான பிராகில், ஆயிரக்கணக்கான செக். மாணவர்கள் நேற்றுத் தெருக்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். பிரட்டிஸ்லாவா முடிவுகள் பற்றிய தமது சந்தேகங்களை வெளியிடும் முகமாகவே மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததாகக் கூறப்படுகிறது. அவர்கள் சோவியத் எதிர்ப்புக் கோஷங்களையும் எழுப்பினர்.

திரு. டுப்ஜெக், பிரட்டிஸ்லாவா மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறிய பல முடிவுகள் குறித்து, மாநாட்டு முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதே மாணவர்களின் ஆர்ப்பாட்டத்துக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

# கம்யூனிஸ் நாடுகளிடையே பலமான கருத்து வேறுபாடுகள்

## ஹங்கோரிய தலைவர் கருத்து

இதற்கிடையில், பிரட்டிஸ்லாவா மாநாட்டிலிருந்து புடாபெஸ்ட் திரும்பியுள்ள ஹங்கேரி நாட்டுத் தலைவர் திரு. ஜோஹனஸ் காடர், கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையே பலமான, தீர்க்கப்படாத பல கருத்துவேற்றுமைகள் இன்னும் நிலவுவதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவர், அவற்றை விளக்கிக் கூறவில்லை.

பிரட்டிஸ்லாவா பேச்சுவார்த்தைகள் பற்றி மேற்கு ஜெர்மன் தலைவர் டாக்டர் கெய்ஸிங்கர் கருத்து வெளியிடுகையில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் தனது உறவுகளை விருத்திசெய்யும் கொள்கையைத் தமது நாடு தொடருமெனத் தெரிவித்தார்.

### டுப்ஜெக்குக்குப் பூரண வெற்றியல்ல

பிற மேற்கு நாடுகளில் உள்ள அரசியல் பார்வையாளர்கள் பிரட்டிஸ்லாவா மாநாட்டை, செக். தலைவர் திரு. டுப்ஜெய்க்குக்கு ஒரு பரிபூரண வெற்றியெனக் கணிக்க முடியாதென்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிச்சுமாறிகள் தொல்லை

### யாழ். பஸ் நிலயத்தில்

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாண பஸ் நிலயத்தில் முடிச்சுமாறிகள் தொல்லையால் பிரயாணிகள் அவஸ்தைக்குள்ளாகின்றனர். யாழ். பஸ் நிலயத்தில் நேற்று முன்தினம் அதிகாலை கட்டைக்காடு செல்லும் பஸ்ஸில் பிரயாணம் செய்வதற்காக நின்ற வாலிபர் ஒருவரின் பர்ஸை முடிச்சுமாறிகள் அடித்துவிட்டதனால் வாங்கிய டிக்கட்டையும் திருப்பிக் கொடுத்துவிட்டு பிரயாணத்தை கைவிட்டு விட்டார்.

மாணவரான இவ்வாலிபர் பரீட்சைக்கு அவசர அலுவலாகப் பிரயாணம் செய்ய இருந்ததாகவும், தமக்கு நேர்ந்த இவ் அனுபவம் பற்றியும் இ. போ. ச.விடம் புகார் செய்தார்.

## கல்விச் சுற்றுலா

உரும்பராய், திங்கள் பலாலி ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த அறுபது மாணவர்களும், ஆசிரியர்களும் இம்மாதம் 7-ம் திகதி கல்விச்சுற்றுலா வொன்றை மேற்கொள்ள விருக்கின்றனர். இவர்கள் இரண்டு வாரங்களில்வரை தென்னிந்தியாவிலுள்ள சரித்திரப்பிரசித்திபெற்ற இடங்களைப் பார்வையிடுவர்.

## அமைச்சருக்கு மகஜர்

புன்னாலைக்கட்டுவன், திங். 'ஊரெழு உப தபாற் கந்தோரை இரண்டாம் தரத்திலிருந்து முதலாம் தரத்திற்கு மாற்றுவதற்கான சகலஒழுங்குகளையும் செய்து தரவேண்டுமென்றும்தொலைபேசி அமைப்பையும் ஏற்படுத்தித்தரவேண்டும்' என்றும் திரு. அ. காராளசிங்கம் தபாற்-தந்தி அமைச்சருக்கு அனுப்பிவைக்கப் பட்டமனுவொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், செவ். கட்டுடை ஐனசமூகநிலையத்தினர் நிலைய மண்டபத்தில் கூடி புதிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்தனர். இளைப்பாறிய கொழும்பு மாவட்டத் தபால் அதிபர் திரு. இ. நகுலேசு கூட்டத்திற்குத் தலைமைவகித்தார். மானிப்பாய் பட்டினசபைத் தலைவர் திரு. சி. இராசேந்திரமும் கூட்டத்திற்கலந்து கொண்டனர்.

திரு. இ. நகுலேசு நிலையத்தின் புதுவருடத்தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இதர உத்தியோகத்தர் விபரம் வருமாறு: செயலாளர்: திரு. சி. சிவகுருநாதன், உபதலைவர்: திரு. க. வேலுப்பிள்ளை, உபசெயலாளர்: செல்வன் இ. குமாரகுலசிங்கம், தனாதிகாரி திரு. க. இராசேந்திரம், கணக்குப்பரிசோதகர்: செல்வன் ப. முருகவேள். 12 பேர் கொண்ட நிர்வாகசபை பொன்றும் தெரிவுசெய்யப்பட்டது. தநி

## நூல் வெளியீட்டு விழா

முன்னேஸ்வரம், செவ்வாய் ''ஸ்ரீ முன்னேஸ்வர வரலாறு'' என்ற நூல் வெளியீட்டுவிழா இம்மாதம் 8-ந் திகதி முன்னேஸ்வரம் கோவில் மண்டபத்தில் முன்னேஸ்வரம் தேவஸ்தான பரிபாலனகர்த்தா, பிரம்மஸ்ரீ சி. பாலசுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் நடைபெறும். பேராதனைப் பல்கலைக்கழக சமஸ்கிருத விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

## பிரதமருக்கு நன்றி

நுவரேலியா, திங்கள் பொதுஜன அபிப்பிராயத்திற்கு மதிப்பளித்து, மாவட்டசபை மசோதாவைக் கைவிட்ட பிரதமருக்கு நன்றி தெரிவிப்பதென நுவரேலியா மாநகர சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

## நாடக வட்டத்தின் நோக்கம்

யாழ்ப்பாணம், செவ். 'தமிழ்நாடகங்களின் தரத்தையும் நாடகஉலகின் நிலைமையை உயர்த்தவும் உதித்த யாழ். நாடக வட்டம் தமிழ் நாடக வளர்ச்சிக்குத் தொண்டுசெய்ய மக்கள் ஆதரவு வேண்டும்'

இவ்வாறு பன்னாலை சேர்கனகசபை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நாடகவிழாவில் உரைநிகழ்த்திய யாழ். நாடக வட்டத் தலைவரான திரு. து. உருத்திரமூர்த்தி பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் ராஜ் குழுவினரின் 'சிருப்பர் குடும்பம்' 'சக்கடத்தார்' ஆகிய நாடகங்களும், யாழ். நாடக வட்டத்தினரின் 'பயிர் தந்த பரிசு' நாடகமும் இடம்பெற்றன. (வா. தி.)

## செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவ ஏற்பாடுகள்

வல்வெட்டித்துறை, திங். தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 23-ந் திகதி வெள்ளிக்கிழமை இரவு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 1-ந் திகதி பூங்காவனத்திருவிழாவும், 5-ந் திகதி தேர் உற்சவமும், 6-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

இந்நாட்களில் சுகாதாரம், தற்காலிக பொலிஸ் நிலயம் அமைத்தல், நீர் விநியோகம், மின்சாரம், பஸ் சேவை முதலியன சம்பந்தமாக செய்யப்பட வேண்டிய ஏற்பாடுகள் பற்றி காரியாலய காரியாதிகாரி திரு. சுந்தரம் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

செல்வச்சந்நிதிராமமுன்னேற்றச்சபை மண்டபத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டில் காரியாதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, பொலிஸ் அதிகாரிகள், சுகாதாரப்பரிசோதகர், கிராமசேவையாளர், கோவில் பூசகர்கள், உரிமையாளர்கள், ஆதீனகர்த்தாக்கள் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 6—8—68


[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அல் 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 அதிப்பாடல்கள், 7-30 குரல்வலை, 8-00 இசைவேளை, 8-15 இன்னிசைமலர்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 சுதம்ப இசை.

344 மீற்றர் அல் 49 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துகள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழோடு இசைபாடல், 6-30 விளையாட்டு விமர்சனம், 6-45 பாலனம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 'கதிர்காமம்'— உரைச்சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9 30 பேச்சு, 9-45 ஜாட்டு — வீணை தனை சிங்கம்.






# இன்றைய விலைமதிக்கமுடியாத பரிசு: புத்தம் புதிய கார்

என்றாலும், 50 சதத்துக்கே உங்களுக்குக் கிடைக்கலாம். மேலும், பெருந்தொகையான பணத்துக்குக் காசோலையும் கிடைக்கும்!

தேசிய லொத்தர் டிக்கெற் வாங்கினால் மட்டும் இது உங்களுக்குக் கிடைக்கும். ஆம், நீங்களும் புத்தம் புதிய கார் ஒன்று பெற்றுக்கொள்ளலாம்.

சீட்டிழுப்பு இல. 206. தேதி: 9-8-68- புத்தம் புதிய ஹோல்டன் ரொறேனா கார் ரூபா 16,800/- *



சீட்டிழுப்பு இல 207. தேதி: 16-8-68 புத்தம் புதிய ஹில்மன் சுப்பர் இம்ப் கார் ரூபா 15,450/- *

*தீர்வை உட்பட இவைக்கான வழமையான கொம்பனி விலைப் பட்டியலில் அடங்கியுள்ளது.



இந்தக் கார்களை கொள்முதல் செய்வதாக இருந்தால் சீட்டிழுப்பின் 14நாட்களுக்குள்ளாகவே செல்லுபடியாகும்.

இன்றே ஒரு தேசிய லொத்தர் டிக்கெற் வாங்குங்கள்!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## "நாட்டின்தேவையை பூர்த்திசெய்யவேண்டும்".

பருத்தித்துறை, திங்கள்

"இன்றுவரை நமது நாட்டின் கல்வி ஒரு காலனி ஆட்சியின் தேவைகளைப் பூர்த்திசெய்வதாக அமைந்துள்ளதன்றி, நாட்டின் கைத்தொழில் விவசாய அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய ஆக்க பூர்வமான கல்விமுறையாக அமையவில்லை. இதன் விளைவாக இன்றும் நாம் எமது அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் பிறநாடுகளை எதிர்பார்க்கவேண்டிய வெட்கமான நிலைமை உருவாகியுள்ளது"

இவ்வாறு நேற்று முன் தினம் மேலைப்புலோலி ஸ்ரீ பாரதி பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய பருத்தித்துறை இலங்கை வங்கி மனேஜர் திரு வி. எஸ். கந்தப்பு கூறினார்

REGAL JAFFNA
Daily at
6 . 8. 7-00 & 9-45 P. M.
Jack Macgowran &
Sharon Tate
in
THE FEARLESS VAMPIRE KILLERS
(Adults)

யாழ். மாவட்ட மத்திய பிரிவு

# உயர்பாடசாலைகள் விளையாட்டு போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். மாவட்ட உயர் பாடசாலைகளின் மத்திய பிரிவு விளையாட்டுப்போட்டி யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தியன் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி, சென் அன்ரனிஸ் கல்லூரி, வேலணை மத்திய மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகியன பங்குபற்றின. இப்போட்டிக்கு திரு. ரி. முருகேசம்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார்.

திருமதி முருகேசம்பிள்ளை வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினர்.

இப்போட்டியின் விபரம் பின்வருமாறு:

### கீழ்ப்பிரிவு

ஈட்டிஎறிதல்: என். ரகுகுலசிங்கம், யே. கே. பிரேமச்சந்திரன், எஸ். யோகராசா.

குண்டெறிதல்: எஸ். தர்மலிங்கம், என். யோகராசா, யே. பி. ரி. தர்மசீலன்.

நீளம்பாய்தல்: ரி. கெங்காதரன், ஆர். அழகரத்ணம், ரி. சஸ்வரானந்தன்.

உயரம்பாய்தல்: ரி. கெங்காதரன், எஸ். விஜயதரன். என். பதிமகுமார்.

400 மீற்றர் ஓட்டம்: ஆர். அழகரட்ணம், எம். ஜெயக்குமார், என். மோகனதாஸ்.

100 மீற்றர் தடை ஓட்டம்: யே. கே. பிறேமசிசந்திரா, எஸ். விஜயதரன், யே. பி. ரி. தர்மசீலன்.

200 மீற்றர் ஓட்டம்: ரி. சஸ்வரானந்தன், ஆர். அழகரட்ணம், பி. வசந்தன்.

பரிதிவட்டம் வீசல்: எஸ். சோமலிங்கம், என். ராஜகுலசிங்கம், எஸ். யோகராசன்.

100 மீற்றர் ஓட்டம்: ரி. கெங்காதரன், ஜே. கே. பிறேமச்சந்திரன், ரி. சஸ்வரானந்தன்.

4X100 அஞ்சல் ஓட்டம்: சென். ஜோன்ஸ் கல்லூரி, மத்தியகல்லூரி. கொக்குவில் இந்துக்கல்லூரி.

### மத்தியபிரிவு

உயரம்பாய்தல்: கே. யனேந்திரா, என். சிவபாதலிங்கம், ஏ. சிவபாலன்.

பரிதிவட்டம் வீசல்: கே. ரட்ணசிங்கம், எஸ். சிவதாசன், எம். ஜீவா.

800 மீற்றர் ஓட்டம்: கே. ரகுநாதன், எஸ். சிவதாசன், கே. தேவராசா.

நீளம்பாய்தல்: எஸ். பி. ஜெயதேசன், வி. சரச்சந்திரா, ஏ சிவபாலன்.

பரிதிவட்டம் வீசல்; கே. ரட்ணசிங்கம், ஜி. ஆர் தம்பிராசா, ஐ. தயானந்தா.

400 மீற்றர் ஓட்டம். வி கருணாகரன், கே. கருணாகரன்: பி. ஆர் மனோராஜன்.

100மீற்றர் ஓட்டம்: எஸ். பி. ஜெயதேசன், எஸ். லோகேந்திரன், கே. சிவநேசன்.

ஈட்டி எறிதல்: ஆர். வரராசசிங்கம், என். பரமேஸ்வரன், கே. பத்மநாதன்.

200 மீற்றர் ஓட்டம்: வி. கருணாகரன், கே. புவிராசசிங்கம், ஜி. சசிச்சந்திரா.

100மீற்றர் ஓட்டம்: எஸ். பி. ஜெயதேசன், ஆர். ராஜசிங்கம், வி. ரவிசங்கர்.

4X100 அஞ்சல் ஓட்டம்: சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில்இந்துக்கல்லூரி.

### மேற்பிரிவு

தடியூன்றிப்பாய்தல்: யே. சாந்திகுமார், ஆர். அம்பலவாணர், ஏ. அமிர்தராசா.

ஈட்டி எறிதல்: என். பவானந்தன், எஸ். ஜோப்பிரகாஷ், டி. எஸ். மிகல்.

குண்டெறிதல்: எஸ். ஜோப்பிரகாஷ், டபிள்யூ. குலேந்திரன், ஆர். ரவீந்திரக்குமார்.

நீளம்பாய்தல்: என். வாமதேவன், கி. கருணாகருணா, ஆர். சிவக்குமார்.

உயரம்பாய்தல்: பி. சுந்தரலிங்கம், பி. விக்னேஸ்வரன், பி. ஆனந்தலிங்கம்.

800 மீற்றர் ஓட்டம், பி. மகேந்திரன், பி. சுந்தரலிங்கம், எம். எஸ். லோகநாதன்.

பரிதிவட்டம் வீசல்; பி. மகேந்திரன், என். ஜோப்பிரகாஷ். கே. சாந்தசொரூபன்.

400மீற்றர் ஓட்டம்: என். வாமதேவன், கே. சாந்தசுரூபன், ஆர். ராஜலிங்கம்.

200 மீற்றர் ஓட்டம்: ஆர். சிவக்குமார், ஆர். ராஜதுரை, ஏ. நகுலேந்திரன்.

110 மீற்றர் தடை ஓட்டம்: எஸ். சுகுமார், ஏ. சிவானந்தன், பி. ஆனந்தலிங்கம்.

1500 மீற்றர் ஓட்டம்: எம். எஸ். லோகநாதன், பி. சுந்தரலிங்கம், என். பிரான்சிஸ்.

கெந்திமிதித்துப் பாய்தல்: பி. புரட்சிதாசன், எம். எஸ் லோகநாதன், பி. விக்னேஸ்வரன்

100 மீட்டர் ஓட்டம்: என். வாமதேவன், என். சுகுமார், எஸ். தங்கேஸ்வரன்.

[6ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தேவை

திறமையுள்ள பெண் நெசவாளர்களும், நூல்சுற்றும் சிறுமிகளும் தேவை. தங்கும் வசதிகள் உண்டு. வரதர் நெசவகம், 69, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். அல்லது ஆனந்தா அச்சகத்தில் விசாரிக்கவும். 1294

### தேவை

நெசவு தெரிந்த பிள்ளைகளும், நூல் சுற்றக்கூடிய பிள்ளைகளும் தேவை. தங்குமிடவசதியுமுண்டு. 'ஆனந்தி நெசவகம்' 33 சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. 1298

### விற்பனைக்கு

காணி:

புங்குடுதீவு கோவிக்குறிச்சி வரதீவு மேற்கு வயல்காணி 22 பரப்பு விற்பனைக்குண்டு. மு. திருச்செல்வம், 543, கே. கே. எஸ். ரோட், தட்டார் தெரு, பலசரக்குக்கடை, யாழ்ப்பாணம். 1295

வளவு:

சுந்தரோடை மடேட்டாகை அம்மன் கோவிலுக்கு முன்பாக ஒரு வளவு விற்பனைக்கு உண்டு. மொத்தப் பரப்பு 8 லிபரங்கட்கு தொடர்பு கொள்க. திருமதி அரசரெம்மைமா "ராசா வில்லா" சுந்தரோடை, சுன்னாகம். 1296

காணி:

சங்கானை வங்கி ரோட் 10-ம் கட்டை அச்சுவேலி இறை, இருவர் சேர்திருத்தப் பாடசாலையின் முன்பாக உள்ள பெரியதெருவின் அருகாமையில் 100 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு, கடை, தொழிற்சாலை அமைப்பதற்கு நல்ல வசதியான இடம். முழுமையாகவோ அன்றேல் பகுதிபகுதியாகப் பிரித்தோ விற்பனை செய்யப்படும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். ரோக் யோசெப், ஆசீர்வாதம் அச்சகம், 32, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1286

### காணவில்லை

பொமினேரியன் நாய் இரு தினங்களுக்கு முன் பாண்டியன்தாழ்வில் காணாமல் போய்விட்டது. தகவல் தருவோருக்கு 25 ரூபாய் சன்மானம் வழங்கப்படும். கே. இராசரத்தினம், 297 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1299

நாளை முதல்
மனோகரா (யாழ்ப்பாணம்) ஸெயின்ஸ்தான் (சிரமிம்பிராவ்)
* ஜெய்சங்கர் * எல். விஜயலட்சுமி
கே.பி. சுந்தராம்பாள், நாகேஷ், தங்கவேலு
நடித்த
உயிர்மேல் ஆசை

பிளாஸா (கொழும்பு) மைலன் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)



ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
மனோரமா
நாகேஷ்
முத்துராமன்
பேபி பத்மினி
மனோகர்
நடித்த



ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ்
நான்

கெபிட்டல் (கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜந்திமாலா
நடித்த
சங்கம்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Goerge Peppard. Alan Ladd
in
CARPETBAGGERS
(Adults only)

கடைசி வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
ரகுநாதன் - சந்திரகலா
தங்கவடிவேல்
நடித்த
நிர்மலா

வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
பி. சரோஜாதேவி
நடித்த
அரச கட்டளை

2வது மாதம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா

இன்று மட்டும்
மானிப்பாய்
வெஸ்லி சினிமா
சிவாஜி கணேசன் — சரோஜாதேவி
நடித்த
பாகப்பிரிவினை

நாளை முதல்
அசோகன் — லீலாவதி
நடித்த
கார்த்திகை தீபம்

தேவை
தினசரி 500 முதல் 1000 றாத்தல் வரை
மரவள்ளிக்கிழங்கு
கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா
பகுதிகளிலிருந்தும் வாங்கலாம்
ஸ்ரீலங்கா ரப்பியோகா புறடக்ஸ்
தொடர்பு கொள்ளுங்கள்:-
சுந்தரம் பிறதர்ஸ்,
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை கந்தன் ஆலயப்பிரவேசம்

# "ஹரிஜனங்களை உள்ளே செல்ல அனுமதிக்கமாட்டேன் என்றார்"

## சி. சுந்தரலிங்கம் மீதான வழக்கில் மனுதாரர் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ். "வழக்கம் போல் அன்றும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு வழிபடச்சென்றேன். கைகால் முகம் கழுவியபின் நான் உட்பிரகாரத்திற்குள் செல்லும்போது எதிர் மனுதாரர் [சி. சுந்தரலிங்கம்] தடுத்தார். "ஏன் தடுக்கிறீர்கள்?" என்றேன். எதிர் மனுதாரர், 'ஹரிஜனர்களை கோவிலுக்குள் விடமாட்டேன்' என்றார். மீண்டும் "எதற்காக தடுக்கிறீர்கள்?" என்றேன். 'திருவிழா நாட்களில் மட்டுமல்ல, அதற்கு பிறகும் ஹரிஜனர்களை உள்ளே அனுமதிக்க மாட்டேன்' என்று எதிர் மனுதாரர் கூறினார். நான் திரும்பிச்சென்று விட்டேன்.

மாவிட்டபுரம்கந்தசுவாமி கோவில் தொண்டர் சபைத் தலைவரான திரு. சி. சுந்தரலிங்கம் மீதான தடை உத்தரவு விசாரணை நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி ஜனாப் ஐ. எம். இஸ்மயில் முன்னிலையில் நடைபெற்ற போது மனுதாரரான சின்னப்பு கணேசன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

விசாரணையைப் பார்ப்பதற்காக கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர்திரண்டு நின்றனர்.

சின்னப்பு கணேசன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: எனது சமயம் இந்து சமயம். எனது பெற்றோரின் சமயமும் அதுதான். நான் அல்வாயிலுள்ள சிவன் கோவில், மற்றும் கந்தசாமி கோவில், அம்மன் கோவில்களுக்கும் சென்று வழிபட்டிருக்கிறேன். செல்வச்சந்நிதி கோவிலுக்கும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கும் சென்று உள்பிரகாரத்திற்குச் சென்று வழிபட்டிருக்கிறேன். கடந்த 20 வருடங்களாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், உட்பிரகாரத்திற்குள் சென்று வழிபட்டேன்.

மாவிட்டபுரத்துக்கு நான் வசிக்குமிடத்திலிருந்து 14 மைல் தூரம். கடந்த மாதம் 1-ம் திகதி நான் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு சென்று, உட்பிரகாரத்திற்கு வழக்கம்போல், செல்ல முற்பட்டபோது எதிர் மனுதாரர் தடுத்தார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஒரு பொதுக் கோவில் என அறிந்து வழிபடச் சென்றேன். அக்கோவில் ஒரு பொது தர்மஸ்தாபனம். அதுபற்றிய வழக்குக் கொப்பியையும் இணைத்திருக்கிறேன். எதிர் மனுதாரர் என்னை தடுக்கக்கூடாதென உத்தரவுவழங்க வேண்டும்.

மனுதாரரான கணேசன் சார்பில், அட்வகேட் எஸ். கதிரவேற்பிள்ளை, அட்வகேட் எஸ். பொன்னையாவின் உதவியுடனும், புறக்டர் எஸ். மகாதேவனின் அனுசரணையுடனும் ஆஜரானார்.

எதிர் மனுதாரரான சி. சுந்தரலிங்கம் சார்பில், அட்வகேட் சி. பொன்னம்பலம், அட்வகேட் எஸ். ஆர். கனகநாயகம், அட்வகேட் சி. சோமசேகரம் ஆகியோர் புறக்டர் ஏ. சண்முகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

நீதிபதி விசாரணையை அடுத்த மாதம் 11-ம் திகதி வரை ஒத்திவைத்தார்.

'தர்மகர்த்தாக்களின்

## சம்மதமின்றி எந்த கோயிலும் திறக்கப்படவில்லை'

### எதிர்மனுதாரர் தரப்பில் வாதம்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆலயங்கள் உண்டு உண்டு. இவற்றில் 36 ஆலயங்களை மட்டும்தான் ஹரிஜனர்களுக்கு திறந்துவிட்டிருப்பதாக அரசாங்க அதிபர் வெளியிட்ட ஒரு அறிக்கை கூறுகிறது. தர்மகர்த்தாக்களின் சம்மதத்துடன் கோவில்கள் திறந்துவிடப்பட்டது. அவர்களின் சம்மதமின்றி எந்தக் கோயிலும் திறந்துவிடப்படவில்லை.

எதிர் மனுதாரர் சார்பில் ஆஜரான அட்வகேட் சி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு நேற்று கோர்ட்டில் தெரிவித்தார்.

அட்வகேட் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: மிகப் பழமைவாய்ந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பிராமணர்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. துரைச்சாமி குருக்கள் அக்கோயிலின் ஆதீனகர்த்தாவாக இருந்துவருகிறார். அநாதிகால பழக்கவழக்கத்தின்படி இக்கோவிலில் குறிப்பிட்ட வகுப்பினர் குறிப்பிட்ட இடத்திலிருந்தே வழிபட்டு வந்தனர்.

பிராமணரல்லாதவர்கள் மூலஸ்தானத்திற்கோ, வசந்த மண்டபத்திற்கோ சென்று வழிபடமுடியாது. பிராமணர்கள்மட்டும்தான் மூலஸ்தானம்மகா மண்டபத்திற்கு செல்ல முடியும். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் ஹரிஜனர்கள் என்றுமே அர்த்தமண்டபத்திற்குள் சென்று வழிபட்டதில்லை. திருவிழாக்காரர்களான ஹரிஜனர்கள்கூட தாங்கள் அர்த்தமண்டபத்திற்குள் என்றும் சென்றதில்லையென கூறியுள்ளனர்.

ஆகம முறைப்படி ஹரிஜனர்கள் அர்த்தமண்டபத்திற்குள் சென்றால் திருவிழாக்கள் நிறுத்தப்பட்டு, பிராயச்சித்தம் செய்தபின்னரே, திருவிழா நடைபெறுமென்றும் இக்கோயிலில் ஆகமம் நடைமுறையிலிருந்துவருகிறதென்றும் அவர் கூறினார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் வழிபடச் செல்லும்போது எதிர்மனுதாரான சி. சுந்தரலிங்கம் தடுத்தாரென்றும் அவருக்குத் தடுக்க உரிமையில்லையென்றும் தான் கோவிலுக்குள் சென்று வழிபட உத்தரவு வழங்கப்படவேண்டுமென்றும் கோரி அல்வாயைச் சேர்ந்த சின்னப்பு கணேசன் என்பவர் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி முன்னிலையில் சென்றமாதம் 14-ம் தேதி மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இதற்கு சி. சுந்தரலிங்கம் எதிர்மனுவொன்றைத் தாக்கல்செய்திருந்தார். இவைபற்றிய விசாரணைநேற்று ஆரம்பமானது.

எந்தக்கோயிலிலும்

## "வழிபடுவது மனிதஉரிமை"

### வழக்கறிஞர் கருத்து

யாழ்ப்பாணம், செவ். மத்தியகுடங்களுக்கு முன்னால் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கோவில்கள் ஹரிஜனர்களுக்கு திறந்துவிடப்பட்டது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஒரு பிரசித்திபெற்ற புராதன ஆலயம். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் இங்கு தரிசிக்கவருகிறவர்கள் இப்பக்தர்களில் யார் எந்த வகுப்பைச்சேர்ந்தவர்கள் என்று கண்டு பிடிப்பதுமுடியாத காரியம்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தொண்டர்படைத் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் மீதான தடை உத்தரவு விசாரணையில் மனுதார் சார்பில்ஆஜரான அட்வகேட் எஸ். கதிரவேற்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

அட்வகேட் கதிரவேற்பிள்ளை மேலும் கூறியதாவது. இந்துவான மனுதார் 20 வருடமாக அக்கோயிலுக்கு சென்று வழிபட்டு வந்துள்ளார், எதிர்மனுதார் திருவிழா முடிந்த பின்னரும் கோயிலுக்குள் அனுமதியேன் என்றுகூறியபடியான மனுதார் தடை உத்தரவு விதிக்கும்படி மனு தாக்கல் செய்தார்.

இந்தக் கோயிலில் மட்டுமல்ல எந்தக் கோவிலிலும், மனுதார்வழிபடுவது மனித உரிமையாகும். முன்னர் பலகாலம் ஹரிஜனர்கள் கீழே இருந்துதான் செல்வார்கள் அந்த நிலைமை இன்று மாறிவிட்டது. மாவிட்டபுரம் கோவிலுக்கு அந்த ஊர்மக்கள் மட்டும் வழிபடச் செல்வதில்லை. வெளியூரிலிருந்தும் செல்வார்கள். இவர்களை எவருமே அடையாளம் காண முடியாது. உள்ளூர் ஹரிஜனர்களை மட்டுமே அடையாளம் காணலாம். வெளியூர் ஹரிஜனர்களை எவரும் அடையாளம் காணமுடியாது.

எதிர்மனுதார் வழிபடுபவராயிருந்தாலும் சரி கோவில் தர்மகர்த்தாவின் ஏஜண்டாக இருந்தாலும் சரி மனுதாரரைதடைசெய்ய அவருக்கு உரிமை இல்லை.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உயர்......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

4X400 அஞ்சல் ஓட்டம்: மத்தியகல்லூரி. சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி.

4X100 அஞ்சல் ஓட்டம்: [illegible] கல்லூரி, இந்துக்கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி.

(தொ. தி)

# பாக். வெளியுறவு மந்திரிக்கு சீனாவில் வரவேற்பு

## இரு நாட்டு உறவுகளும் வலுவடைவதாக அறிவிப்பு

பீகிங், ஆக. 5 பீகிங்குக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி திரு. அர்ஷத் ஹுசெயினுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரமொன்றில் பேசிய சீன வெளியுறவு மந்திரி திரு. சென் யீ இரு நாடுகளுக்குமிடையேயான நட்புறவு முன்னேறி வருவதாகக்குறிப்பிட்டுள்ளார்.

பல துறைகளிலும் சீனாவும் பாகிஸ்தானும் நெருங்கி ஒத்துழைத்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகுமென்று திரு. சென் யீ மேலும் குறிப்பிட்டார்.

திரு. சென் யீயின் உரைக்குப் பதிலளித்துப் பேசுகையில், 1965-ம் ஆண்டில், இந்திய - பாகிஸ்தான் போர்க்கால கட்டத்தில், சீனா பாகிஸ்தான் பக்கம் சார்ந்துநின்றதற்குப்பாகிஸ்தான் நன்றியுடையதாகவுள்ளதாகப் பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி திரு. ஹுசெயின் கூறினார்.

அக்காலந்தொட்டு இன்றுவரை சீனா, பாகிஸ்தானுக்குப் பலவித பயனுள்ள உதவிகளை அளித்துவருவதற்கும் அவர் தமது நன்றியைத்தெரிவித்தார்.

# "இரும்புக்கழியால் தாக்கி கொதிநீரில் அமுக்கினார்"

## பச்சிளப் பாலகன் கொலை:

### இளைஞர் சாட்சியம்

திருக்கோணமலை, திங். இரண்டரை வயதான பாலகன் அலிகானை இரும்புக்கழியினால் கழுத்தில் அடித்து பின்னர் கொதிக்கும் நீரில் முதல் எதிரி அமுக்கினார் என்று 18 வயதான கல்தான் என்ற இளைஞர் இன்று திருக்கோணமலை மாஜிஸ்ரேட் கோர்ட்டில் ஒரு வழக்கு விசாரணையின் போது கூறினார்.

பச்சிளம் பாலகனான அலிகான் கொலை சம்பந்தமாக மீராமொகிதீன், சாமிச்சி அப்பு ஆகியவர்கள் மீது திருக்கோணமலை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அலிகான் என்ற பாலகன் கடத்தப்பட்டதாகவும் மூன்று தினங்களின் பின் அவனுடைய சடலம் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 15-ம் திகதி தாம் திருக்கோணமலைக்கு வந்ததாகவும் அன்று அலிகானைத் தாம் கண்டதாகவும், தனது தாய் எங்கே என்று அலிகான் கேட்டதாகவும் கூறிய சாட்சியான கல்தான் தாம் பிறகு வந்து பார்த்தபோது அலிகானைக் காணவில்லை என்றார். பிறகு முதல் எதிரியின் வீட்டுக்குத் தாம் போனதாகவும் அங்கு அலிகான் ஒரு இரத்தக்கறை படிந்த துணியால் சுற்றப்பட்டுக் கிடந்ததாகவும் வாயைத் திறக்கக் கூடாது என்று முதல் எதிரி தம்மை பயமுறுத்தியதாகவும் கல்தான் கூறினார். அண்டாவில் கொதித்த நீரில் அலிகானின் கால்களைப் பிடித்து முதல் எதிரி அமுக்கியதாகவும் கல்தான் கூறினார்.

அடுத்த நாள் இரண்டாம் எதிரியைத் தாம் கண்டதாகவும் கல்தான் கூறினார். விசாரணை ஒத்திப்போடப்பட்டது.

## புதிய கமிஷனர்

நல்லூர், திங்கள் ஓய்வுபெற்ற உதவிப் போஸ்மாஸ்டர் ஜெனரல் திரு. ஏ. பேரம்பலம், யாழ்ப்பாணம் மாநகரசபையின் கமிஷனராகத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளார் என அறியப்படுகிறது. இம்மாதம் 15-ம் தேதி இவர் கடமையைப் பொறுப்பேற்பார் என்றும் தெரிய வருகிறது.

## நிலைமை சீராகும்

கொழும்பு, ஞாயிறு வழக்கமாக ஜூன், ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் மரக்கறி, வெங்காயம், மிளகாய் ஆகியவற்றிற்குத் தட்டுப்பாடு ஏற்படுவதுண்டு. இவ்வருடம், இந்நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தின் பின் நிலைமை சீராகுமென உணவு அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

### அந்தியஷ்டி அழைப்பு

காலஞ்சென்ற இளைப்பாறிய பொலிஸ் விதானையார் திரு. ஆ. செல்லையா அவர்களின் அந்தியஷ்டி 7-8-68 புதன்கிழமை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இதனை ஏற்றுக் கொள்வார்களாக. 1

## மரண அறிவித்தல்

### திருமதி ஆச்சிப்பிள்ளை தம்பிமுத்து

யாழ். மெடிக்கல் ஹோல் உரிமையாளர் அருளம்பலம், பென்ஷனர் வைத்திலிங்கம் ஆகியோரின் மாமியாரும், திருமதி இராசம்மாவின் தாயாரும் மு. இளையதம்பி, சி. செல்லத்துரை, ஐ. கனகலிங்கம், அ. மகாதேவா, க. சிற்றம்பலம் (விஷகடி வைத்தியர்) ஆகியோரின் பேத்தியாருமாகிய திருமதி ஆச்சிப்பிள்ளை காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் கொட்டடியில் இருக்கும் இல்லத்திலிருந்து ஈமக் கிரியைகளுக்கு இன்று மாலை 3 மணிக்கு விள்ளாண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 1591

## பத்திரிகை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. இப்பொழுது 50 சத விகிதம் தீர்வை விதிக்கப்பட்டுள்ளது. ரேடியோகிராம் தீர்வை 150 சத விகிதமாகவும், கிராமபோன் தீர்வை 100 சத விகிதமாகவும், டைப்பிடிப்பு பிலிம் தீர்வை 78 சத விகிதத்திலிருந்து 100 சத விகிதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

## நாட்டின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்கும் இலங்கைக்குமிடையே மேலும் நல்லுறவு வளர்ந்து வரும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

போக்குவரத்துஅமைச்சர் திரு. ச. எம். பி. குலசேகரவும் உரை நிகழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org